1971 ஜூலை 30]

ஆட்சித் தலைவர்கள் அதற்கான திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த அந்த மாவட்டங்களிலே உள்ள பகுதிகளில் சமுதாயக் கிணறுகளை வெட்டுகின்ற முயற்சிகளிலே ஈடுபடுகின்றார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் அப்படி நிறைவேற்ற வேண்டுமென்ற நிலைமை இல்லை. அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள இடங்களின் நிலைமைகளைப் பொறுத்து, வாய்ப்பும் வசதிகளையும் பொறுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

Loss of cash box in Madras Corporation

*554 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the cash box of the Corporation of Madras has been lost about the 24th April 1971: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்ற ஏப்ரல் மாதம் 23-ம் நாளில், சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் ரூ. 65,690.68 வைக்கப்பட்டிருந்த இரும்புப்பெட்டி, அன்று காலை 10.35 மணியளவில் காணமற்போய் விட்டது. இது குறித்துக் காவல் துறையினரிடம் புகார் செய்யப் பட்டதன் பேரில் அத்துறையினர் புலனாய்வு மேற்கொண்டதன் விளைவாக இதுவரை சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர் களிடமிருந்து இதுவரை ரூ. 45,000 கைப்பற்றப்பட்டுள்ளது. காவல் துறையின் புலனாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படிப் புலன் ஆய்வு செய்யப்பட்டதில் கார்ப்பரேஷனில் வேலை செய்கின்றவர்கள் இதிலே சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் வெளிவந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்திலே வேலைசெய்கின்ற துணை கேஷியர் இரண்டு பேர்களும் பணியாளர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகளா அல்லவா என்பது புலனாய்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகுதான் வழக்குத் தொடரப் படவேண்டும். ஞானவேலு என்பவரும் அவரோடு சேர்ந்த ஆறு பேர்களும் ஆகமொத்தம் ஏழு பேர்களும் விழுப்புரத்தில் 7—6—71 அன்று கைதுசெய்யப்பட்டு அவர்களிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. 8—6—71 அன்று ஜெயராமன் என்பவர் தாம்பரத்தில் கைதுசெய்யப்பட்டு அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டு இருக்கிறது. இவர்கள் மூலமாக இன்னும் பலரைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் புலனாய்வுகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

DR. H. V. HANDE: Is it not a fact that the higher Corporation Officials who should have normally telephoned to the Police Department failed to do so in time and that only some clerks who got frightened rushed to the Police Station? May I know whether

the Government have got information as to why the higher Revenue Officials in the Corporation did not contact the Police in time ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டு இருப்பது—

Immediately the Periamet Police Station was informed and complaint was filed. Then the Deputy Commissioner came. என்று தான் இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் இல்லை.

நகராட்சித் தலைவர்கள்

* 555 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மொத்த நகராட்சிகள் தற்போது எத்தனை?

(இ) அந்த நகராட்சிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்தெந்த நகராட்சிகளில் தலைவர்களாக உள்ளனர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 93.

(இ) தற்போது எந்த நகராட்சியிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எல்லா சமுதாயத்தினருக்கும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வாய்ப்பு அளிக்கும் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயர் தேர்ந்து எடுக்கப்படுகின்ற முறையிலே அதாவது ஆண்டுக்கு ஒரு வகுப்பினரைச் சேர்ந்தவர் மற்ற நகராட்சிகளுக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வழி வகைகளை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு கன்வென்ஷன், மரபாகக் கையாளப்பட்டு வருகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. மரபு தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டு வருவதின் காரணமாக 8 ஆண்டுக்காலத்திற்கு ஒரு முறை தாழ்த்தப்பட்டவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை இருக்கிறது. அதேமாதிரி ஆங்காங்கு இருக்கின்றவர்கள் அப்படிப்பட்ட ஒரு மரபை ஏற்படுத்துவார்களானால் சாலச் சிறந்த தாக இருக்கக்கூடும். இந்துக்களும் முஸ்லீம்களும் இருக்கின்ற சில நகரங்களிலே ஒரு தடவை ஒரு இந்து தலைவராகவும் ஒரு தடவை முஸ்லீம் தலைவராகவும் இருந்துவருகின்ற முறையை கைக்கொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தலைவராக வரக்கூடாது என்ற தடை இல்லை. ஆங்காங்குள்ளவர்கள் தாழ்த்தப்பட்டவர் தலைவராக வருவதற்கு வசதிகளைச் செய்துதருவார்களானால் அது வரவேற்கப்படவேண்டிய ஒன்று ஆகும். ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இராணிப்பேட்டை நகராட்சியிலே தலைவராக இருப்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது.